**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 32/2021 DW1**

25.11.2025 **பி.வா.சா.1 பழனி சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எனது தகப்பனார் பெயர் கோபால். எனது தகப்பனாருக்கு 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள் என்றால் சரிதான். 27.01.2011ல் பி.வா.சா.ஆ.18 மூலம் நானும் எனது குடும்பத்தாரும் சேர்ந்து ஒரு செங்குட்டுவன் என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.18ஐ 05.12.2011ல் ரத்து செய்து விட்டோம் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்யும் போது எனது அப்பா தான் பணம் கொடுத்து பைசல் செய்தார் என்றால் சரியல்ல. கிரைய ரத்து பத்திரத்தின் போது யார் பணம் கொடுத்தார்கள் என்றால் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கிக் கொண்டு எனது பெற்றோர் செங்குட்டுவனிடம் பணம் கொடுத்தார்கள். 05.12.2011ல் மேற்படி பி.வா.சா.ஆ.18ஐ ரத்து செய்த போது நான் ஏதும் சொத்தை விற்றேனா என்றால் இல்லை. 05.12.2011ந் தேதிக்கு முன்பும் நான் எந்த சொத்தையும் விற்கவில்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலான கிரைய பத்திரங்கள் மூலம் 28.12.2011 மற்றும் 06.01.2012 ஆகிய தேதிகளில் சொத்துக்களை விற்றேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த ரத்து காலத்தில் எந்த சொத்தும் என்னால் விற்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 05.12.2011 தேதியிட்ட பி.வா.சா.ஆ.19ல் நான் பணம் கொடுத்து பைசல் செய்தததாக எந்த வாசகமும் காணப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 12 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலான கிரைய பத்திரங்களில் கண்டுள்ள வாசகங்கள் அனைத்தும் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ. 12 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலான கிரைய பத்திரத்தில் என்னுடைய வியாபார செலவிற்காகவும், குடும்ப செலவுகளை பைசல் செய்வதற்காகவும் என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 12 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் மூலம் மொத்தம் ரூ. 6,21,000/-க்கு விற்றேன் என்றால் சரிதான். வழிகாட்டி மதிப்பு படியா அல்லது மார்க்கெட் மதிப்பு படியா மேற்படி கிரைய பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் வழிகாட்டி மதிப்பு படி கிரையம் செய்யப்பட்டது. மேற்படி பி.வா.சா.ஆ. 12 முதல் பி.வா.சா.ஆ.17 தேதியில் வழிகாட்டி மதிப்பு மற்றும் மார்க்கெட் மதிப்பு எது அதிகம் அல்லது குறைவு என்று கேட்டால் எனக்கு தெரியாது. ரூ. 6,21,000/- கொடுத்ததற்கு ஆதாரம் ஏதும் எழுத்து மூலமாக உள்ளதா என்றால் இல்லை. நான் தான் விற்று முழு பணத்தையும் எடுத்துக் கொண்டேன்

என்றும், என் அப்பாவிடமோ அல்லது குடும்ப செலவிற்காக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மாட்டு வண்டியை என் அப்பா தான் வாங்கினார் என்றும் நான் வாங்கவில்லை என்றும், கடனையும் என் அப்பா தான் பைசல் செய்தார் என்றும், நான் பைசல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா வாங்கிய கடன் எதனையும் நான் பைசல் செய்தேனா என்றால் இல்லை. எனது தம்பி கமலக்கண்ணனுக்கு பிரச்சனை ஏற்பட்ட போது எனது தம்பிக்காக நான் ரூ. 50 ஆயிரத்தை பஞ்சாயத்து தலைவர் நடராஜன், சிவபிரகாசம் ஆகியோரிடம் கொடுத்தேன். 2009ல் அவ்வாறு கொடுத்தேன். நடராஜனுக்கு அவ்வாறு பணம் கொடுத்தற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் கமலக்கன்னனுக்காக பஞ்சாயத்து நடந்தது என்றும், அதனால் நடராஜனுக்கு பணம் கொடுத்தது என்பது வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.20 மண்ணாங்கட்டி என்பவர் சின்னம்மாளுக்கு சர்வே எண் 89/1ஏ ல் கண்ட 10 செண்ட் நிலத்தை சீதனப்பத்திரமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். சின்னம்மாளுக்கு, எல்லம்மாள் என்ற ஒரே மகள் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.20ல் சின்னம்மாளுக்கு பிறகு எல்லாம்மாள் அடைய வேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாணிக்க கவுண்டரின் முதல் மனைவி எல்லம்மாள் என்றால் சரிதான். எல்லாம்மாள் இறந்து விட்டார் என்றும், அவருக்கு மாணிக்க கவுண்டர் மட்டுமே வாரிசு என்றால் சரிதான். எல்லம்மாளுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். எல்லாம்மாள் இறந்த பிறகு அமிர்த்தம்மாளை மாணிக்க கவுண்டர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அமிர்த்தம்மாளின் மகள் தான் என் தாயார் வாதி உண்ணாமலை என்றால் சரிதான். எல்லம்மாள் இறந்த பிறகு மாணிக்க கவுண்டர் தான் சர்வே எண் 89/1 ஏ ல் கண்ட 10 செண்ட் நிலத்திற்கு வாரிசு என்றால் சரிதான். மாணிக்க கவுண்டர் 30 - 40 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார் என்றால் சரிதான். மாணிக்க கவுண்டருக்கு அமிர்ததம்மாளும், உண்ணாமலையும் வாரிசுகள் என்றால் சரிதான். அமிர்தம்மாள் சர்வே எண் 89/1 ஏ குறித்து எதுவும் எழுதி வைக்காமல் 28.02.2015ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அமிர்தம்மாளுக்கு உண்ணாமலை மட்டும் தான் வாரிசு என வாரிசு சான்று பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 89/1 ஏ 10 செண்டில் உண்ணாமலைக்கு மட்டுமே பாத்தியம் என்றும், எனக்கோ, என் அப்பாவிற்கோ அல்லது அவரது மற்ற வாரிசுகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 21 மற்றும் 22 மூலம் வாதி உண்ணாமலை சர்வே எண் 89/1 ஏ 10 செண்டை கமலக்கண்ணன் மகன்களுக்கும், சுந்தரமூர்த்தி மகன்களுக்கும் 17.06.2021ல் தானபத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும், அவ்வாறே அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின்

மதிப்பு கடந்த 2021ல் எவ்வளவு என்று கேட்டால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்து 1 செண்ட் ரூ. 30 ஆயிரம் மதிப்பு போகும். வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 22,38,075/- என்று வழக்கில் வாதியால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வாறு எதிர்வழக்குரை செய்வது என்றும், நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்வது என்றும் தெரியாமல் வாதியை ஏமாற்ற வேண்டும் என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.